Registered as a News Paper at the G.P.O.
Srilanka. Under No. KJV 59/87

# ஐக்கியதீபம்

திங்கள் AIKIYATHEEPAM இதழ்

பக்கங்கள் 06

விலை 5/-

தீபம் 01 | தை2005 | ஒளி 01

## 'சுனாமி' ஆழிப் பேரலை அனர்த்தம்

# யாழ். மாவட்டக் கூட்டுறவு சங்கங்களுக்கு மூன்று கோடியே 33 லட்ச ரூபா இழப்பு!

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமி ஆழிப் பேரலை அனர்த்தத்தினால், யாழ். மாவட்டத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்கு சுமார் 3கோடியே 33 லட்சத்து 2ஆயிரத்து 413ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

சுனாமி ஆழிப் பேரலை அனர்த்தத்தினால், பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கம், வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம், புலோலி ப.நோ.கூ. சங்கம் ஆகியவற்றுக்கு சுமார் ஒரு கோடியே 96 லட்சத்து 25 ஆயிரத்து 33 ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. இந்நட்டம் கிளைக்கட்டடங்களினதும், களஞ்சியங்களினதும், மற்றும் தளபாடம், உணவுப் பொருள் ஆகியவற்றை உள்ளடக்கி உள்ளன.

பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கத்தின் கட்டிடங்களுக்கு 49 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், தளபாடம், உணவுப் பொருள் ஆகியவற்றுக்கு 46 லட்சத்து 76 ஆயிரத்து 700 ரூபாவும் நட்டம் ஏற்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கத்தின் கட்டிடங்களுக்கு 62 லட்ச ரூபாவும், தளபாடம் மற்றும் உணவுப் பொருட்களுக்கு ஆகியவற்றுக்கு 47லட்சத்து 93ஆயிரம் ரூபாவும் நட்டம் ஏற்பட்டுள்ளது.

புலோலி ப.நோ.கூ. சங்கத்திற்கு 5 ஆயிரத்து 333 ரூபா மட்டும் நட்டம் ஏற்பட்டுள்ளது.

கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒருகோடியே 36 லட்சத்து 77 ஆயிரத்து 380 ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

26 கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் கட்டிடங்களுக்கு 57 லட்சத்து 14 ஆயிரத்து 800 ரூபாவும், வாகனங்களுக்கு 46 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவும், தளபாட உபகரணங்களுக்கு 23 லட்சத்து 53 ஆயிரத்து 780 ரூபாவும், உணவும் ஏனையவற்றிக்கு 9 லட்சத்து 98 ஆயிரத்து 800 ரூபாவும் நட்டம் ஏற்பட்டுள்ளது. (6ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியத் தலைவர் மலர் வெளியீடு



தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் 50ஆவது பிறந்ததின நிகழ்வை முன்னிட்டு யாழ். மாவட்டக் கூட்டுறவாளர்களினால் 'தமிழ்த் தேசியத் தலைவர்' என்னும் மலர் வெளியீடு செய்யப்பட்டது.

கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற இவ்வெளியீட்டு விழாவில் மும்மதங்களைச் சார்ந்த தலைவர்களும், யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி, கூட்டுறவுத்துறைப் பொறுப்பாளர் பொ.புஷ்பகுமார், விஜிதரன், கூட்டுறவாளர்கள்; கூட்டுறவுப் பணியாளர்கள் பெருமளவில் கலந்துகொண்டனர்.

இவ்விழாவில் தமிழீழத் தேசியத் தலைவரின் 50ஆவது பிறந்த தின நிகழ்வை முன்னிட்டு யாழ். மாவட்டக் கூட்டுறவாளர்களினால் வெளியிடப்பட்ட தமிழ்த் தேசியத் தலைவர் எனும் மலரை யாழ். மாவட்டக கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதியிடம் கையளித்தார்.



## மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப கூட்டுறவு நிறுவனங்கள்

# பிரதேச உணர்வுகளுடன் நவீன முகாமை முறைகளை புகுத்த வேண்டும்

கூட்டுறவு நிறுவனங்கள் மாறி வரும் சூழ்நிலைகளுக்கேற்ப தற்போது மிக நீண்ட காலமாக பின்பற்றி வரும் மரபு முறையிலான முகாமைத்துவ செயற்பாடுகளில் இருந்து மாறி நவீன முகாமைத்துவ அணுகுமுறைகளை உள்ளடக்கி நிறுவனம் சார்ந்த, தொழில் சார்ந்த, பிரதேசம் சார்ந்த உணர்வுகளை சாதகமாக கட்டியெழுப்பி வளர்த்து கொள்வதுடன், அவை எதிர்கொள்ளுகின்ற சவால்களையும், கூட்டுறவாளர்கள் முறியடிக்க வேண்டும்.

கூட்டுறவாளர் அமரர் விஸ்வலிங்கம் வீரசிங்கத்தின் 40ஆவது ஆண்டு நினைவு விழாவில் நினைவுப் பேருரை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள், வணிகபீட சிரேஷ்ட விரிவுரையாளர் இ. இரட்ணம் மேற்கண்டவாறு கூட்டுறவாளர்களை கேட்டுக்கொண்டார்.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ கனகசபாபதி தலைமையில் அமரர் வீரசிங்கத்தின் 40 ஆவது நினைவு தினம் நினைவு கூறப்பட்டது.

முன்னதாக மானிப்பாய் ப.நோ.கூ. சங்க முன்றலில் அமைந்துள்ள அமரர் வீரசிங்கத்தின் திருவுருவச் சிலைக்கு மானிப்பாய் ப.நோ.கூ. சங்கத் தலைவர் மா. செல்வராசா மலர் மாலை அணிவிக்க யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ. கனகசபாபதி கூட்டுறவுக் கொடியை ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற நினைவுதினக் கூட்டத்தில் கூட்டுறவுச் சபையின் பணிப்பாளர் தேசிவ சுந்தரமூர்த்தி கூட்டுறவுக் கீதம் பாடினார்.

தொடர்ந்து இ.இரட்ணம் நினைவுரையாற்றும் போது,

(6ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டுறவுச் சங்கக் காரியாலயத்தை சங்க நிர்வாகத்திடம் ஒப்படைக்கவும்

இராணுவம் நிலைகொண்டுள்ள வலிகிழக்கு வடபகுதி (அச்சுவேலி) ப.நோ.கூ. சங்கத்திலிருந்து இராணுவம் வெளியேறி கட்டிடத்தை சங்கத்திடம் ஒப்படைக்குமாறு கோரும் தீர்மானம் ஒன்று யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை விசேட பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கூட்டுறவுச்சபைத் தலைவர் பெ. கனகசபாபதி தலைமையில் நடைபெற்றக் இக்கூட்டத்தில் தெல்லிப்பளை, பருத்தித்துறை, ப.நோ.கூ. சங்கங்களுக்கு பணியாளர்களும், மக்களும் சுதந்திரமாக சென்றுவரக்கூடிய வகையில் இராணு காவலரண்கள் அப்பால் நகர்த்தப்படுவதுடன், இராணுவ ஆக்கிரமிப்பில் இருக்கும் சங்கங்களின் கிளைகள் இயங்கிய பகுதிகளும் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் 2005ஆம் ஆண்டுக்கான பாதடு மொத்தக்கடன் எல்லையும் பொதுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. (6ஆம் பக்கம்)

# தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கம் மீண்டும் சொந்தக் கட்டிடத்தில்

யுத்த அனர்த்தங்களினால் பல்வேறு இடங்களில் இடம்பெயர்ந்து இயங்கிவந்த தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கம் தற்போது சொந்தக் கட்டிடத்தில் இயங்குவதற்கு புனரமைப்பு செய்யப்பட்டு வருகிறது.

பல லட்ச் கணக்கான ரூபா செலவில் (6ஆம் பக்கம் பார்க்க)





மானிப்பாய் ப.நோ.கூ. சங்க முன்றலில் அமைந்துள்ள அமரர் வீரசிங்கத்தின் சிலைக்கு சங்கத்தலைவர் எம். செல்வராசா மாலை அணிவிப்பதையும் கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ. கனகசபாபதி கூட்டுற வுக் கொடி ஏற்றுவதையும் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இ. இரட்ணம் கூட்டுறவாளர் வீரசிங்கத்தின் 40 ஆவது ஆண்டு நினைவு பேருரை நிகழ்த்துவதையும், கூட்டுறவு தின விழாவையொட்டிய போட்டியில் சிறந்த சங்கமாக தெரிவுசெய்யப்பட்ட அச்சுவேலி ப.நோ.கூ. சங்க பொதுமுகாமையாளரிடம் கூட்டுறவுத்துறைப் பொறுப்பாளர் பொ.புஷ்பகுமார் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

> எத்தனை குழப்பம் நேர்ந்தாலும் பொய்மை மறைந்துவிடும்;
> மேய்மை மேலே உயர்ந்து நிற்கும்.
>
> - காந்தி அடிகள்.

# ஐக்கிய தீபம்

## கூட்டுறவுப் பெரியார் அமரர் விஸ்வலிங்கம் வீரசிங்கம்

கூட்டுறவு இயக்கத்தின் மூலம் சமூக இன, மத அரசியல் வேறுபாடுகளற்ற சமுதாயம் ஒன்றை உருவாக்குவதையே தன் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்து காட்டிய கூட்டுறவுப் பெரியார் அமரர் விஸ்வலிங்கம் வீரசிங்கம்.

ஒருவர் பலருக்காகவும், பலர் ஒருவருக்காகவும் பரஸ்பர உதவியுடன் ஜனநாயக ரீதியிலான சமுதாயமொன்றை கட்டி எழுப்புவதையே புனிதமான கூட்டுறவு இயக்கம் உணர்த்தி நிற்கிறது. இத்தகைய இயக்கத்தில் இணைந்து கூட்டுறவு இயக்கத்திற்கு பெருமைதேடி தந்தவர் அமரர் வீரசிங்கம். அவரது 40ஆவது நிறைவு தினத்தை கூட்டுறவாளர்கள் நினைவு கூர்வது பொருத்தமானதொன்றே.

பிறரை சுரண்டாமலும், சுரண்டப்படாமலும், இருப்பதே கூட்டுறவின் உன்னதமான நோக்கமாகும். இதனைக் கடைப்பிடிப்பவர்களே உண்மையான கூட்டுறவாளனாகும். இத்தகைய நன்நோக்கத்திற்கு இலக்கணமாக வாழ்ந்து காட்டியவர் அமரர் வீரசிங்கமாவார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நல்லாசிரியனாக தனது சேவை ஆரம்பித்து அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக மது ஒழிப்பு பிரசாரத்தின் மூலம் தனது சமூகப் பணியை ஆரம்பித்து புனிதமான கூட்டுறவு இயக்கத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார்.

முதலாளித்துவ சுரண்டல்களில் இருந்து மக்களை விடுவிப்பதற்கான சிந்தனையுடன், 'றொச்டேல்' முன்னோடிகளினால் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு அமைப்புக்களை உருவாக்கி இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் வழிநடத்தி தனக்கென தனியான ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டவர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராக சுமார் 25 வருடங்கள் கடமையாற்றிய காலப்பகுதியில் கல்லூரி மாணவன் ஒருவன் இளைத்த தவறுக்காக, அவன் இளைத்த தவறுக்கு கல்லூரி அதிபராக இருந்த எனக்கும் பங்கு உண்டு என்று கூறி மாணவர் மீதான குற்றப்பத்திரத்தை மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவரும் கூடியிருந்த சபா மண்டபத்தில் வாசித்து மாணவனை தண்டிக்கும் பிரம்பினால் தன்னைத் தானே அடித்துக் கொண்டு அனைவரையும் வியப்பிற்குள்ளாக்கியமை இன்றைய கல்விற் சமூகத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

கூட்டுறவுச் சேவையில் அவர் ஆற்றிய பங்களிப்பு இன்றைய கூட்டுறவாளர்களுக்கு முன்னுதாரணமாக அமைந்துள்ளது. கூட்டுற வின் மூலம் வடக்கையும், தெற்கையும் இணைத்து அகில இலங்கை கூட்டுறவுச் சம்மேளனம் உருவாக்கி அதன் முதலாவது தலைவராக விளங்கினார். இதன்மூலம் கூட்டுறவில் பெரும்பான்மையின மக்களின் உள்ளங்களைக் கவர்ந்து அவர்களின் பேராதரவையும் நன்மதிப்பையும் பெற்றிருந்தார்.

அரசியலில் ஈடுபட்ட அவர் சுயேட்சை வேட்பாளனாக வட்டுக்கோட்டைத் தொகுதியில் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டு, நாட்டின் அபிவிருத்திக்கு தாய் மொழிக் கல்வியின் அவசியத்தையும், தொழில்நுட்பக்கல்வியின் அவசியத்தையும் பாராளுமன்றத்தில் எடுத்துரைத்ததுடன் யாழ்ப்பாணத்திற்கு ஒரு தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் நிறுவப்படவேண்டியதின் அவசியத்தையும் எடுத்து விளக்கி அவர் ஆற்றிய உரை அனைத்து இன பாராளுமன்ற உறுப்பினர்களாலும் பாராட்டுதலைப்பெற்றது.

வடபகுதி ஐக்கிய மேற்பார்வை சபையை உருவாக்கியும் கூட்டுறவு வங்கி, கூட்டுறவுக் கல்லூரி ஆகியவற்றை உருவாக்கி தென்பகுதி கூட்டுறவாளருக்கு வடபகுதிக் கூட்டுறவு அமைப்புகளை முன்மாதிரியாக திகழும் வண்ணம் செய்தப் பெருமை அமரர் வீரசிங்கத்திற்கே உரித்தாகும். இந்நிலையில் அவரது ஞாபகார்த்தமாக யாழ். நகரின் மத்தியில் அமைக்கப்பட்ட கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழாவும் நான்காவது அனைத்துலக தமிழாராட்சி மகாநாடும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

எனவே, அமரர் வீரசிங்கம் அவர்களின் நினைவுநாள் விழாவினை வருடா வருடம் நினைவு கூருவதுடன் மட்டும் நின்றுவிடாது அதற்கும் ஒருபடி மேலாக அவரது பெயரில் வானுயர எழுந்திருக்கும் மண்டபத்திற்கு முன்னால் அவரது சிலை ஒன்றினை நிறுவுவதற்கும் -

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது பட்டதாரி என்ற பெருமையுடன் முப்பது ஆண்டுகள் கல்விச் சேவையிலும், கூட்டுறவில் சுமார் ஐம்பது வருடங்கள் சேவையாற்றியவர் என்ற வகையிலும், அவரது சேவையினை நினைவு கூரும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஏகாந்த நிலையில் கௌரவப்பட்டம் வழங்கி கௌரவிப்பதற்கு தற்போதைய பல்கலைக்கழக துணைவேந்தர் ஓர் கூட்டுறவாளனாக இருப்பதாலும், - அவரும் பல்கலைக்கழக சமூகமும் கூட்டுறவாளர்களும் முன்வரவேண்டும்.

அமரர் வீரசிங்கம் அவர்களின் முற்றுமுழுதான சேவைகளை கௌரவிக்கும் வகையில் இவற்றுக்கெல்லாம் மேலாக அவரது பெயரில் ஞாபகார்த்த அஞ்சல் முத்திரை ஒன்றினை வெளியிடுவதற்கு ஏற்ற முழு முயற்சிகளையும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். இதுவே அமரர் வீரசிங்கம் அவர்களுக்கு கூட்டுறவாளர்களும், தமிழ் மக்களும் செய்ய வேண்டிய நன்றிக்கடன்களாக அமையும்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

# 21ஆம் நூற்றாண்டில் உலக கூட்டுறவு இயக்கம்

# பூரண வெற்றிபெறுவதற்கான தந்திரோபாயங்கள்

**இ. சுப்பிரமணியம்**
*(இணைப்பாறிய அதிபர் தே. கூ. சபையின் கூ. அ. நிலையம்)*

21ஆம் நூற்றாண்டில் உலக கூட்டுறவு இயக்கம் மட்டற்ற அச்சுறுத்தல்களையும் சவால்களையும் எதிர்நோக்கியுள்ளது. முதலாளித்துவமும் அதற்கு சார்பான சக்திகளும் 21ஆம் நூற்றாண்டிலும் தொடர்ந்து வரும் நூற்றாண்டுகளிலும் பலம் பொருந்திய மாபெரும் சக்திகளாக தொடர்ந்தும் உயிர் வாழும் என்பது இன்று முடிந்த முடிவாகிவிட்டது. இப் பலம்பொருந்திய மாபெரும் சக்திகளை வெற்றிகரமாக எதிர்த்துப் போராடி கூட்டுறவு தனது மனிதநேயப் பணிகளை பூரணமாக நிறைவு செய்வதற்கு கூட்டுறவு அமைப்புக்கள் எல்லைக்கடந்த தந்திரோபாயங்களை பின்பற்ற வேண்டியது மிக அவசியமாகும்.

19ஆம் நூற்றாண்டில் கால்மார்ஸும் 20ஆம் நூற்றாண்டில் லெனின், மாசேதும், பிடல்கெஸ்ரோ போன்ற பொதுவுடமைவாதிகள் பொதுவுடமைத் தத்துவத்தின் மூலம் முதலாளித்துவதிற்கு எதிரான மட்டற்ற கண்டனங்களையும் கோஷங்களையும் முன்வைத்தனர். முதலாளித்துவ அச்சுறுத்தல்களினாலும் சுரண்டல்களினாலும், முற்றாகப் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களும் ஏழைகளும் ஒன்று திரண்டு முதலாளித்துவத்திற்கு சார்பான அரசுக்கெதிராக புரட்சிகரமாக போராட்டங்களை நடத்தி முதலாளித்துவத்தைக் குளிதோண்டிப் புதைக்கவேண்டுமென்றும், தொழிலாளருக்குச் சார்பான பொதுவுடமை அரசை புரட்சிமூலம் ஏற்படுத்த வேண்டுமென்று கோஷமிட்டனர். இக்கோஷங்களினால் தூண்டப்பட்ட தொழிலாளர்களும் ஏழைகளும் அனேக நாடுகளில் முதலாளித்துவத்திற்கு எதிரான பல்வேறு போராட்டங்களை நடத்தினர். இப்போராட்டங்களை பொதுவுடமைவாதிகள் வர்கப்போராட்டமென அழைக்கின்றனர்.

தொழிலாளர்கள் முதலாளிகளிடம் இருந்து தமது மனிதநேய உரிமைகளைப்பெற நடத்திய போராட்டமே வர்கப்போராட்டமாகும் இப்போராட்டங்களால், ரஷ்யா, சீனா, கிழக்கு ஜெர்மனி, ருமோனியா, செற்கோசிலவாக்கியா, கியூபா போன்ற நாடுகளில் முதலாளித்துவ அரசுகள் முற்றாக அளிக்கப்பட்டு, தொழிலாளர்களுக்கு சார்பான பொதுவுடமை அரசுகள் தோற்றுவிக்கப்பட்டன. இக்காலகட்டத்தில் முதலாளித்துவம் என்றோ ஒருநாள் முற்றாக மறையுமென்று பொதுவுடமைவாதிகள் சிங்கம்போல் கர்ச்சித்தார்கள்.

ஆனால், இன்று பொதுவுடமைவாதிகள் இவ்வரசியல் தீர்க்கதரிசனம் முற்றாகப் பொய்த்துவிட்டது. 21ஆம் நூற்றாண்டிலும் தொடர்ந்து வரும் எல்லா நூற்றாண்டுகளிலும், முதலாளித்துமானது தொடர்ந்தும் பலம்பொருந்திய மாபெரும் சக்தியாக உயிர்வாழும் என்பது இன்று வெள்ளிடை மலையாகிவிட்டது. பொதுவுடமைவாதிகளும், ஜனநாயக சோஷலிசவாதிகளும், கூட்டுறவின் மூலக் கர்த்தாக்களும் முதலாளித்துவத்திற்கு எதிராக முன்வைத்த குற்றச்சாட்டுகளுக்கும் கண்டனங்களுக்கும் முதலாளித்துவம் கூடியக் கவனம் கொடுத்து அவற்றை இலகுவில் தவிர்த்துக்கொள்வதிற்கான விஞ்ஞான ரீதியிலான முகாமைத்துவ தந்திரோபாயங்களை கண்டறிந்து அவற்றை வெற்றிகரமாக செயற்படுத்தி முதலாளித்துவத்திலுள்ள குறைகளையும் தொழிலாளர் சுரண்டல்களையும் முற்றாக நீக்கி தொழிலாளருக்கு தேவையான நலன்புரி வசதிகளை போதிய மட்டில் உருவாக்கி தொழிலாளர் புரட்சிகளை முற்றாகத் தவிர்த்து தொழிலாளர்களை தன்னனியில் இணைத்து தனக்கென உலக அரங்கில் புதிய யுகமொன்றை உருவாக்கிக்கொண்டது.

பல நாடுகளில் முதலாளித்துவம் கடைப்பிடித்த முகாமைத்துவ தந்திரோபாயங்களினாலும், உத்திகளினாலும், பொதுவுடமையின் வளர்ச்சி முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. சிலநாடுகளில் பொதுவுடமை அரசுகள் பலவீனப்படுத்தப்பட்டு குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளன. இதற்கு கிழக்கு ஜெர்மனி மிகச்சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும். ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும், கனடாவிலும் முதலாளித்துவம் காட்டுதீபோல் வெகுவேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. இவற்றுக்கெல்லாம் மூலக்காரணம் முதலாளித்துவவாதிகள் தமது அறிவினாலும், ஆற்றலினாலும், கண்டறிந்து பூரணமாகக் கடைபிடித்த விஞ்ஞான ரீதியிலான நவீன முகாமைத்துவ அணுகுமுறைகளேயாகும்.

முதலாளித்துவம் பொதுவுடமை அச்சுறுத்தல்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு கடைபிடித்த விஞ்ஞான ரீதியிலான நவீன முகாமைத்துவ உத்திகளை கூட்டுறவாளர்கள் மீளாய்வு செய்து அவற்றிற்கேற்ப உயர்ந்த கூட்டுறவு ரீதியிலான விஞ்ஞான நவீன முகாமைத்துவ உத்திகளைக் கண்டறிந்து அவற்றை பூரணமாக பின்பற்றவேண்டியது இன்றைய காலத்தின் தேவையாக இருப்பதுடன் மிக அவசியமானதுமாகும். இந்நூற்றாண்டில் பலம்பொறுந்திய சக்தியாக உருவெடுத்துவரும் முதலாளித்துவ அச்சுறுத்தல்களை கூட்டுறவு அமைப்புகள் இலகுவில் எதிர்கொண்டு பூரண வெற்றியைப் பெறுவதற்கு இதுவே மிகச்சிறந்த தந்திரோபாயமாகும்.

இத்தகைய பெரும்பணியை கூட்டுறவாளர்கள் செய்யத் தவறினால், 21ஆம் நூற்றாண்டிலும், தொடர்ந்து வரும் நூற்றாண்டுகளிலும், கூட்டுறவு இயக்கம் தனது புனிதத் தன்மைகளையும் சிறப்பியல்புகளையும் கொள்கைகளையும், முற்றாக இழந்து 'போலிக் கூட்டுறவு நிறுவனங்களாகவே' உயிர்வாழவேண்டிய இக்கட்டான நிலை ஏற்படும். கூட்டுறவுக் கொள்கைகளுக்கு முற்றிலும் முரணான ஒழுங்கற்ற முறையில் இயங்கும் கூட்டுறவு நிறுவனங்களை மேலைத்தேய கூட்டுறவு பேரறிஞர்கள் 'போலிக் கூட்டுறவு நிறுவனங்கள்' என வர்ணித்திருப்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

(5ஆம் பக்கம் பார்க்க)

# யுத்த அனர்த்தங்களினால் 11 கோடி ரூபாவை இழந்தாலும் மக்கள் சேவையில் பின்னிற்கவில்லை

**சாவகச்சேரி ப.நோ.கூ. சங்க தலைவர் திரு.ந.பாலச்சந்திரன் சங்கத்தின் தற்போதைய நிலைவரம் குறித்து வழங்கிய பேட்டியின் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகிறது.**

இன்றைய சூழ்நிலையில் கூட்டுறவு நிறுவனங்கள் தாம் விரும்பியபடி மக்களது தேவைகளை அறிந்து அவர்களுக்கு சேவைகளை செய்வதற்கு நிதிவளம் பாரிய தடைக்கல்லாக உள்ளது. கூட்டுறவு நிறுவனங்கள் எதிர்கொண்ட யுத்த அனர்த்தங்களினால், நிதிவளங்களை இழந்து பாரிய நிதி நெருக்கடிகளுக்கு இலக்காகின.

ப.நோ.கூ. சங்கங்களை பொறுத்த மட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களினால், பல கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான சொத்துக்களையும் நுகர்ச்சிப் பொருட்களையும் இழந்த நிலையில் பல சிரமங்களுக்கு மத்தியில் மக்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யவேண்டிய நிலையில் நாம் உள்ளோம். என்று சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கத் தலைவர் ந.பாலச்சந்திரன் ஐக்கிய தீபத்திற்கு வழங்கிய போட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களினால், கூட்டுறவு நிறுவனங்களுக்கு ஏற்பட்ட இழப்பீடு சாதாரணமான ஒரு நிகழ்வு அல்ல. புனிதமான கூட்டுறவு சேவையில் ஈடுபட்டுள்ள நாம் இத்தகைய இழப்பீடுகளின் மத்தியிலும், எமது சேவைகளை செய்து வருகிறோம்.

சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பீடு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும் சுமார் 11 கோடியே 17 லட்சத்து 32ஆயிரத்து 936 ரூபா 4 சதத்தை சங்கம் இழந்துள்ளது.

பொருள் இழப்பாக ரூ. 12,511 391,04 சதத்தையும், தளபாட இழப்பாக 14171545 ரூபாவையும், சொத்திழப்பாக 85050000 ரூபாவையும் சங்கம் இழந்துள்ளது. இவ்வளவு



பெருந்தொகையான இழப்பீட்டின் மத்தியிலும், எமது மக்களுக்கு நாம் சேவை செய்ய வேண்டுமென்ற உயரிய உன்னதமான நோக்குடன் மக்களினதும் அங்கத்தவர்களினதும் பொதுச்சபை உறுப்பினர்களதும், நெறியாளர் குழுவினரதும், பணியாளர்களினதும் மற்றும் கூட்டுறவுத் திணைக்களம் அரச திணைக்களங்களினது ஒத்துழைப்புடனும், ஆலோசனைகளுடன் செயற்பட்டு வருகிறது.

கூட்டுறவு நிறுவனங்கள் புனரமைப்பு செய்யப்பட்ட போது உருவாக்கப்பட்ட ப.நோ.கூ. சங்கங்கள் அன்றைய காலகட்டத்தில் உணவுப் பொருள் விநியோகத்திலும் மட்டுமல்லாமல், விவசாய உள்ளீட்டு பொருள் விநியோகத்திலும், ஏகபோக உரிமைபெற்று செயற்பட்டு வந்தன. கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் (C.W.E.), உணவுத் திணைக்களம், மற்றும் கூட்டுஸ்தாபனங்கள், கம்பனிகள் ஆகியவற்றின் முகவர்களாகவும் இயங்கி வந்தன. இதன் காரணமாக ப.நோ.கூ. சங்கங்கள் பலம்பொருந்திய ஆளணி நிறைந்த நிறுவனங்களாக இயங்கியது மட்டுமல்லாது, இலாபத்துடன் இயங்கி சங்க எல்லைப் பரப்பினுள் பல்வேறு சமூக சேவைகளிலும் ஈடுபட்டு வந்தன.

(வளரும்)



சாகச்சேரி ப.நோ.கூ. சங்கம் நடத்திய மகளிர்களுக்கான பயிற்சி நெறியில் அவர்களது உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியை கூ.அ. உ. ஆணையாளர் (எண்பார்வை) திரு.பி.சிவலங்கம் திறந்து வைக்கிறார்.

# மனிதப் பேரழிவை ஏற்படுத்தும் 'எயிட்ஸ்'

## எச். ஐ. வி. எயிட்சுக்கு ஆளாகும் யாழ்ப்பாணம்

விஞ்ஞான உலகிற்கு பெரும் சவாலாக இன்று உருவாகியுள்ளது எச்ஐவி. என்ற உயிர் கொல்லி வைரசு. 1981ஆம் ஆண்டில் உலகில் அறிமுகமான HIV/AIDS 1986ஆம் ஆண்டு இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் முதலாவது AIDS நோயாளி 1992ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டார். போர்க்கால மனித அழிவுகளின் சுவடுகள் இன்னும் அழியாத இந்நேரத்தில் HIV/AIDS இன் தாக்கம் இன்னொரு மனித பேரழிவுக்கு வழிகோலுவதை தடுக்க நிச்சயம் யாவரும் முன்வரவேண்டும். இது தற்போது காலத்தின் தேவையாக மாறிவிட்டது.

HIV/AIDS இன் பிறப்பிடம் வெளிநாடாக இருந்த போதிலும் இன்று எம்மத்தியிலும் இந்நோய் வந்து சேர்ந்துவிட்டது. இனிமேல் வெளிநாட்டையோ அன்றி வெளிநாட்டிலிருந்து வரும் எம்மவரையோ குறைகூறும் செயலைவிட்டு எம்மிடையே மறைமுகமாகப் பரவிக்கொண்டிருக்கும் இவ்வுயிர் கொல்லி எயிட்ஸை விரட்டுவதற்கு நாம் விழிப்படைய வேண்டும்.

HIV/AIDSஇன் தொற்று எமது பிரதேசத்தில் பரவுவதற்கு தற்போதைய சூழலில் மிகச் சாத்தியமாகவுள்ளது. இங்கே HIV என்னும் வைரஸால் ஏற்படுத்தப்படுகின்ற இந்நோய் தொற்றுக்குள்ளான நாளில் இருந்து ஏறத்தாழ 8 அல்லது 12 வருடங்களின் பின்பே நோய்க்கான அறிகுறிகளைக் காட்டும். அதுவரை காலமும் எவ்வித நோயறிகுறியும் காட்டமாட்டாது. நோய்க்கான அறிகுறிகளைக் காட்டும் HIV நிலை நோய் அறிகுறி AIDS நோயை மாற்ற எவ்வித மருந்துகளுமே கண்டு பிடிக்கப்படாத மருத்துவ உலகையே வியப்பிலாழ்த்தி உள்ள எயிட்ஸ் இறப்பையே பரிசாகக் கொடுத்து விடை பெறுகிறது. உயிருள்ள பொழுதே உயிரில்லாத ஜீவனாக வாழ்ந்து கொண்டி ருக்கும் HIV/AIDS நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் உலகில் அதிகரித்து வருகிறது. யாழ்ப்பாணத்தில் எயிட்ஸ் தாக்கத்திற்கு 29 பேர் இதுவரை குருதிப் பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர். இதில் கவலைக்குரிய விடயம் பெரும்பாலானோர் இளம் வளதினர். இளம் வயதினரை இந்நோய் தாக்குவதற்கான காரணம் தான் என்ன?

முக்கிய காரணம் இளைஞர், யுவதிகளிடையே மட்டுமன்றி மக்களிடையே காணப்படுகின்ற அறியாமையேயாகும். நிஜ வாழ்க்கையையும், வெளிச்சூழல் வாழ்க்கையைப் போல, வேறுபடுத்திப் பார்க்கத் தெரியவில்லை. பலபேரது வாழ்க்கைமுறை, வழிநடத்தல் தவறான வளர்ப்பு முறைக்கு இட்டுச்செல்கின்றது. இவ்வாறு கட்டுப்பாடு பிறழ்வதனால், ஒவ்வொரு மனிதனுக்கும் உருவாக வேண்டுமே தவிர இது பிறரால் போதிக்க முடியாத ஒன்று. இன்று பலர் வயது வந்தவுடன் ஆண் பெண்ணுடன், பெண் ஆணுடன் என கதைக்கிறார்கள். இது தப்பில்லை. இதில் முக்கியமாக கதைக்க வேண்டிய ஒரு ஆணோ பெண்ணோ தான் தேர்ந்தெடுப்பவரை தனது வாழ்க்கைக் காலம் முழுவதும் தக்க வைக்க வேணும் என்பதாகும்.

இளம் வயதில் உந்தல்களை தமது ஆசைகளை தீர்த்தால் போதும் என்ற எண்ணக் கருக்களையே இவர்கள் கொண்டுள் ளார்கள். பல இளம் குடும்பங்களில் விவா கரத்துக்கள் கூட ஏற்பட்டுள்ளமைக்கு இது காரணமாகும்.

போரால் பாதிக்கப்பட்டுள்ள குடும் பங்கள் கணவனை இழந்த மனைவி, மனைவியை இழந்த கணவர் போதிய வழிகாட்ட பெற்றோர் இல்லாத குழந்தைகள். கல்வியில் தொடர்ந்து தம்மை ஈடுபடுத்தாத சிறுவர்கள். இவ்வாறு ஏராளமானோர் பாலியல் என்பது உணவு. உடை உறையுள் போன்று எமது அடிப்படைத் தேவைகளில் ஒன்று என என்னுகிறார்கள்.

இது உடல் உணர்வுகளுடன் சம் பந்தப்பட்டது. பாலியல் தேவைகள் ஏற் படும் போது அது பூர்த்திசெய்ய வேண்டியதொன்றாகிறது. ஒரு கணவனை இழந்த மனைவியோ. அல்லது மனைவியை இழந்த கணவனோ தமது பாலியல் தேவையை கட்டுப்படுத்த முடியாமல். வேறு துணையை நாடுவது இன்று ஏற்பட்டுள்ளது. இதுபோல பொருளாதார நிலைமையை ஜீரணிக்க முடியாமல் மனைவியை வெளிநாட்டிற்கு அனுப்பிவிட்டு தனிமையி லுள்ள கணவன்மார் தமது குழந்தை களில் நாட்டம் காண்பதும் நமது பிரதே சங்கள் சிலவற்றில் நடைபெறுகின்றது.

வடபகுதி தென்பகுதி தொடர்பு அதிகரிப்பு தொழில் வாய்ப்பாக பயணிகள் போக்குவரத்து, வாகனச் சாரதிகள் பலர் இரவில் மேற்கொள் ளப்படும் இப்போக்குவரத்தில் தமது துணைகளைப் பிரிந்திருப்பவர்கள் பலர். பகல் நேரங்களில் குடும்ப வாழ்க்கை முறையால் தமது பாலியல் தேவையை பூர்த்திசெய்ய வழியில்லை. இதனால் தாம் தங்கி இருக்கும் இடங்களில் இதனை திருப்தி செய்ய பல விலை மாதரை நாடுதல் அதிகரித்து வருகிறது. யுவதிகள் போதைப் பொருட்களுக்கு அடிமையாகி சுய நினைவுகளை இழத்தல் இது போன்ற சம்பவங்களால் HIV/AIDS அதிகரிப்பதற்கு அதிகரித்த காரணங்களாக அமைந்துள்ளன.

இந்நேரங்களில் வயது, வயது வேறுபாடோ. சரி பிழை, தமது அந்தஸ்து பதவி தெரிவதில்லை. எல்லாம் மனம்தானே. மனம் ஒரு குரங்கு என்று கூறியது இது போன்ற விடயங்களில் சரியாகவே உள்ளது. தவறுகளின் பின் மனம் தளர்வது அர்த்தமற்றது. தவறுக்கு ஏற்ப தருணம் அமையாமல் பாதுகாத்து கொள்வதும் தம்மை சுதாகரித்து சரியாக சிந்தித்து தன்னைத் தானே உணர்ந்து (தனது பலம், பலவீனம்) அறிந்து அல்லது இது போன்ற சந்தர்ப்பங்களில் இணைந்து விலகிக்கொள் வதிலும் திறமையும், பாதுகாப்பும், மரியாதையும் உண்டு. இதையே ஒருமுறை இணைந்து எம்மையே நாம் பெருமைப்பட்டுக் கூடக்கொள்ளலாம்.

HIV என்பது எமது நோயெதிர்ப்பு சக்தியை அழிக்கின்ற ஒரு வைரசு ஆகும். இது HUMAN IMMUNO DEFICIENCY VIRUS என்னும் ஆட்கொல்லி என அழைக்கப்படுகின்றது. மனித நீர்ப்பீடன சக்தி, எதிர்ப்பு சக்தியில் குறைபாட்டை ஏற்படுத்தும் வைரசு என்பதாகும். எமது உடலில் பாதுகாப்பு அரணாக விளையும் குருதியிலுள்ள வெண்குழியங்களில் உள்ள T4 வகைக் கலங்கள் அல்லது CD4 வகை நிண நீர்க்கலங்களே இவ் HIVக்கு இலக்காகின்றது. இந்த கலங்களிலே உட்புகும் வைரசு கலத்தில் பல மாற்றத்தை உண்டு பண்ணி, பல வைரசுக்களை உருவாக்குகின்றது. இவ்வாறு ஒவ்வொரு கலமும் வைரசு தாக்கத்திற் குள்ளாவதனால் காலப்போக்கில் நீர்ப்பீடன சக்தி கலங்களில் குறையும் வைரசுக்களின் எண்ணிக்கையில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இவ்வாறு 8-12 வருடங்களில் ஏறத்தாழ 80% நோயெதிர்ப்பு சக்தி குறைவடைந்து விடுகிறது. இதுவே ஒவ்வொரு வருடைய நோயொதிர்ப்பு சக்தியில் தங்கியுள்ளது. இயல்பாகவே உடற்பலம் குறைந்த ஒருவருக்கு 6 வருடங்களில் மரணம் சம்பவிக்கலாம். மிக உடற்பலமான ஆரோக்கியமான ஒரு வருக்கு 12 வருடங்கள் கூட எடுக்கலாம். பொதுவாக 8-12 வருடங்கள் நோயறிகுறி காலமாக கூறப்படுகிறது.

HIV தொற்று நோய் அதாவது தொற்றுக்குள்ளான ஒருவருடன் சுகதேகி ஒரு வர் பாதுகாப்பற்ற பாலுறவு கொள்வதன் மூலமும் தொற்றுள்ள ஒரு வருடைய குருதியை உரிய பரிசோதனைக் குட்படுத்தாது ஏற்றுவதன் மூலமும், தொற்றுள்ளவருக்கு பாவித்த ஊசி போன்ற உபகரணங்களைத் தொற்று நீக்காது பாவிப்ப தன் மூலம் இது சுகதேகியை வந்து அடைகிறது. HIV ஒருவருடைய உடலைச் சென்றடைந்தமையால் குருதிப்பரிசோதனை மூலமே உறுதிப்படுத்தலாம். எலிசா பரிசோதனை (Elisa test) வெஸ்டேன் (Western Blot Test) புளொட் பரிசோதனை HIV ஒருவரின் உடலில் புகுந்து அதன் தாக்கத்தை உண்டு பண்ணியதும் அதற்கு எதிராக உடலால் பிறபொருள் எதிரி ஒன்று குருதியில் உருவாக்கும் அது குறித்த செறிவை அடைய ஏறத்தாழ 3 மாதங்கள் செல்கின்றது. இது யன்னற்காலம் எனப்படும். (Window Priod) HIV/AIDS நோயைப்பற்றி அறிந் திருப்பது தொற்றிலிருந்து எம்மைப் பாதுகாப்பதற்கு, நோயைப் பற்றி அறிந்திருப்பது மட்டும் பாதுகாப்பாகாது. அதற்குரிய மனக்கட்டுப்பாடும் பாதுகாப்பும் இன்றியமையாதது.

(5ஆம் பக்கம் பார்க்க........)

### சங்க நிர்வாகிகள் காலத்துக்குக் காலம்

# மாற்றப்பட்டாலும் தொழிலாளர் பணியாளர் நலன்கள் பேணப்பட வேண்டும்

**சங்கானை ப.தெ.வ.அ.கூ. சங்கத்தின் தலைவர் திரு.வ.முத்துராசா வழங்கிய பேட்டியின் இரண்டாவது பகுதி இங்கு பிரசுரமாகிறது.**

சங்கானை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கத்தை பொறுத்தமட்டில் பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் அரசாங்கத்தின் சட்டத்திட்டங்களுக்கு அமைவாக போத்தலில்கள் அடைக்கும் தொழிலை மேற்கொண்டு வருகின்றது. பருவகாலத்தில் மேலதிகமாக கிடைக்கும் கள்ளினை வீணே ஊற்றாமல் அவற்றை சேகரித்து வைத்து அங்கத்தவர் களும், சங்கமும் நட்டமடையாது இரசாயனமுறை யில் போத்தலில் அடைத்து கள்ளின் உற்பத்தி குறைந்த காலங்களில் பாவனையாளர்களின் தேவைகளை ஓரளவுக்காவுதல் பூர்த்திச்செய்யும் வகையில் அவர்களுக்கு வழங்கி வருகின்றோம்.

இக்கள்ளிற்கு அதிகளவு மவுசு இருந்தாலும் அதன் விலையை அதிகரித்து விற்பனை செய்யாமல் பாவனையாளர்களை திருப்தி செய்யும் வகையிலும் கள் உற்பத்தியாளர்களை அவர்கள் நஷ்டம் அடையாத வகையிலும், இத்தொழிலை நாம் பல சிரமங்களின் மத்தியில் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஆரம்பகாலத்தில் எம்மால் உற்பத்தி செய்யப்பட்ட பனஞ்சாரயத்திற்கு தென்னிலங்கையில் அதிகளவு கிராக்கி நிலவி வந்தது. இக்கிராக்கியினை ஈடுசெய்யுமளவிற்கு நாம் உற்பத்தியில் ஈடுபட்டபோது, அங் கிருந்த சில நிறுவனங்கள் சாராய விநியோக வியாபார முகவர்களுடன் சேர்ந்து மது வரி இலாகா மூலம் தர மற்ற சாராயம் என வேண்டுமென்று பிரசாரம் செய்தமையால் எமது சாராயம் தென்னிலங்கைக்கு அனுப்பிவைப்பது நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் எமது சாராயம் எமது பகுதியில் அப்போது அதிகளவு விற்பனையை கொண்டிருந்தது. இன்று தென்னிலங்கை யிலிருந்து பெருமளவு சாராய வகைகள் எமது பகுதிக்கு எடுத்து வரப்படுவதினால், எமது சாராயத்தின் விற்பனைகூட எமது பகுதியில் பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளது. இது எமது அங்கத்தவர்களுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பிலிருந்து எடுத்து வரப்படும் சாராய வகைகளுக்கு போதியளவு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுமானால், எமது சாராயத்திற்கு உள்ளூரில் அதிகளவு கிராக்கி ஏற்படுவதுடன், அங்கத்தவர்களுக்கும் அதிகளவு நன்மைகளைக் கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

1990ஆம் ஆண்டளவில் பனை வளம்சார்ந்த எமது பல்வேறுபட்ட உற்பத்தி பொருட்களுக்கு கொழும்பில் முன்னுரிமை அளிக்கப்பட்டு, அதிகளவு சந்தை வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. ஆனால், எமது பனை சார் உற்பத்திப் பொருட்கள் நிபுணத்துவ சேவையின் மூலம் தரம் வாய்ந்ததாக இருந்தபோதும், ஒரு சில மேலதிகாரிகளின் நடவடிக்கைகளினாலும், தற்போதுள்ள சூழ்நிலையினாலும், இவ்வுற்பத்திப் பொருட்கள் புறந்தள்ளப்பட்டுள்ளன.

எமது பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டு றவுச் சங்கங்களைப் பொறுத்தமட்டில், அவை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அரச திணைக்களங்க ளின் கட்டுப்பாட்டிற்கும் சட்டதிட்டங்களிற்கும் அமைவாக செயற்பட வேண்டியுள்ளமை அவசியமாகவுள்ளது. நாம் மது உற்பத்தியில் ஈடுபடும்போதும் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு செயற்படவேண்டியுள்ளது. அங்கத்தவர்கள் உற்பத்தி செய்யும் கள்ளில் விற்பனைக்குரியவைவற்றைவிட வடிசாலைகளுக்கு வழங்குவதற்கு எவ்விதமான பிரச்சினையும் எழவில்லை.

ஆனால், வடிசாலைகள் அவற்றினை சாராயமாக உற்பத்தி செய்யும்போது, அது மதுவரித்திணைக்களத்தின் அனுமதியையும் அதற்கான அனுமதிப்பத்திரமும் பெற்றே உற்பத்தி செய்யவேண்டியுள்ளது.

மதுவரித்திணைக்களத்தின் அனுமதியையும், அனுமதிப்பத்திரத்தையும் பெற்றுக்கொள்வதென்பது, எழிதில் முடியக்கூடிய காரியமல்ல.

இந்நிலையில் நாம் இவ்வனுமதிப் பத்திரத்தை மதுவரித் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்த பொழுதும் அவை இன்றுவரையும் எமக்கு வெற்றியைத் தரவில்லை.

காலத்தின் தேவைகளுக்கேற்ப ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு அமைவாக நாம் எமது செயற்பாடுகளையும் மாற்றியமைக்க வேண்டியுள்ளது. இதில் முக்கிய அம்சம் என்னவென்றால், சங்கத்தின் அபிவிருத்தி தொழிலாளர் நலன்கள், பணியாளர் நலன்கள் என்பனவற்றை நாம் முக்கியமாக கவனித்து செயற்படுத்தல் வேண்டும். என் போன்ற தலைவர்கள் காலத்திற்கு காலம் நிர்வாகத்திற்கு வருவதும் போவதுமாக இருப்பார்கள். ஆனால், அங்கத்தவர்கள் தொழிலாளர்கள், பணியாளர்கள் தொடர்ந்தும் சேவையில் இருந்து வருவார்கள். எனவே, சங்க நிர்வாகங்களுக்கு வருபவர்கள் தமது சொந்த நலன்களையோ அல்லது இலாபங்களையோ எதிர்பாராது அங்கத்தவர்கள், பணியாளர்கள் ஆகியோருக்காக சேவைசெய்ய முன்வரவேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் எமது பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினது வளர்ச்சிக்கு தற்போது எம்மை நெறிப்படுத்திவரும் அமைப்பினர் தமது பூரண ஒத்துழைப்பையும் உதவியையும் நல்கி வருகிறார்கள். இதன் காரணமாக முன்னர் விற்பனை நிலையங்களை அமைக்க முடியாமல் விட்ட இடங்களில் நாம் தற்போது விற்பனை நிலையங்களை ஏற்படுத்தி வருகிறோம். இதற்காக நாம் அவர்களைப்பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். தற்போது சங்கானை பிரதேச செயலரும் அவரின் கீழ் பணிபுரியும் கிராம சேவை உத்தியோகத்தர்களும் எமது சங்கத்தின் சட்டபூர்வமான நடவடிக்கைகள் அனைத்திற்கும் தமது ஒத்துழைப்பையும் உதவிகளையும், நல்கி வருகிறார்கள். இதன் மூலம் அவர் களுக்கும் எமக்குமிடையிலான புரிந்துணர்வு ஆரோக்கியமான செயற்பாடுகளுக்கு ஊக்கமளிப்பதாகவுள்ளது.

சங்க அங்கத்தவர்களுக்கு எமது சங்கம் செய்து வரும் பல்வேறுபட்ட சேவைகளில் முக்கியமாக சங்க எல்லைப்பரப்பினுள் உள்ள அங்கத்தவர்களினது பிள்ளைகளிற்கு ஆரம்பக்கல்வியை ஏற்படுத்திக்கொடுக்கும் முகமாக சுமார் 20 முன்பள்ளிகளை நடத்தி வருகிறோம் பல்வேறு இடங்களிலுமுள்ள இம்முன்பள்ளிகளில் ஆகக்கூடியதாக 45 பிள்ளைகளும், ஆகக் குறைந்ததாக 20 பிள்ளைகளும் கல்வி கற்றுவருகின்றார்கள். 45 பிள்ளைகளுக்கு மேற்பட்ட முன்பள்ளிகளில் தலா 2 ஆசிரியைகளும் 20 பிள்ளைகளுக்கு உட்பட்ட முன்பள்ளிகளில் தலா ஒரு ஆசிரியையும் கடமையாற்றி வருகின்றார்கள். இத்தகைய முன்பள்ளிகளின் கல்வி கற்கும் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு வேண்டிய சகல கல்விசார்ந்த தேவைகளையும் பூர்த்தி செய்து வருகிறோம். இங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியைகளுக்கு 1500/- ரூபாவிற்கு குறையாத தொகையை மாதச்சம்பளமாக வழங்கி வருகிறோம்.

1993ஆம் ஆண்டு சங்க எல்லைப் பரப்பினுள் வசிக்கும் அங்கத்தவர்களின் பிள்ளைகள் 5 பேர்கள் பல்கலைக் கழகத்தில் பட்டம்பெற்றமைக்காக சுமார் 1/2 பவுண் பெறுமதியுள்ள தங்கப் பதக்கம் வழங்கி கௌரவித்துள்ளோம்.

(வளரும்)



சங்கானை ப.தெ.வ. அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கி திறப்பு விழாவில் பொது முகாமையாளர் உரையாற்றுகிறார்.

# கொள்ளி......?

## சிறுகதை

வாசலில் பெல் சத்தம் கேட்டது. வந்து எட்டிப்பார்த்தபோது மோகனும் மனோவும் நின்றிருந்தார்கள்.....

என்னடாப்பா விடிய வெள்ளனவே வந்திட்டியள்..........

கமலின் தாய் செத்திட்டா.... கமலின் மாமா எல்லா இடமும் சொல்லச் சொன்னார்.... வா போவம் என்று மனோ சொன்னதைக் கேட்டதும் எனக்குள் அதிர்ச்சி....

கமலின் தாய் தனியவே இருந்தார்.... தகப்பன் இறந்துவிட்டார். பிள்ளையள் மூன்று பேரும் வெளிநாட்டில். யார் எல்லாம் செய்வது என்ற சிந்தனை.

அப்ப வெளிநாட்டிலிருந்து யார் யார் வருவினம்.....

வா போவம். எனித்தானே தெரியும்... என்றான் மோகன்.

பொறு அம்மாவிடம் சொல்லிவிட்டு வாறேன் என்றவாறு, உள்ளேபோய் அம்மா கமலின்ட அம்மா செத்திடாவாம் மோகனும் மனோவும் வந்து சொன்னாங்கள். நான் போறேன். நீங்க பிறகு வாங்கோவன் என்றவாறு விபரத்தைக் கூறிவிட்டு, சைக்கிளை எடுத்துக்கொண்டு கமல் வீடு நோக்கி சென்றோம்....

மனோ, டேய் கமலுக்கும் தமையன் தமக்கைக்கும் அறிவித்தாச்சா....? கமலின்ரை மாமா எல்லாம் அறிவித்துவிட்டார் யார் யார் வருகின்றார்களோ தெரியாது.... என்றான்.

கணேஸ் அவ வருத்தமாத்தானே இருந்தவ. வேலைக்காரி வந்து சொல்லித்தான் மாமனாருக்கே தெரியும்.......

ஓமடாப்பா போன மாதந்தானே வருத்த மாகிடக்கிறா என்று எல்லாரும் வந்து பார்த்திட்டு போனவை... இப்ப என்ன மாதிரி லீவு எடுக்கலாமோ தெரியது என்றான் மோகன்.

வீட்டிக்கு சென்றதும் ஒரே சனக் கூட்டம். அழகா சோடித்தபடி ஓர் ஆடம்பரகா நின்று கொண்டிருந்தது. வீடியோகாரரும் போட்டோகாரரும் அடிக்கடி தலை காட்டியபடி நின்று கொண்டிருந்தார்கள். 'பாண்ட்' வாத்திய கலைஞர்களும் நின்றிருந்தார்கள்....

பாத்தியாடா மனோ அதுக்கிள்ள எல்லாம் வந்திடுத்து. சனத்தை பார்த்தியே டாப்பா......

தம்பி என்ன விஷேசம் கலியாண வீடோ... என்றபடி ஒருவர் கேட்டுக் கொண்டு போக......

பார்ரா மோகன் நக்கலை

விடடா. சனம் எத்தனையை கதைக்கும் அதையெல்லாம் பொருட்படுத்தக் கூடாது என்றான் மோகன்.

சரி வா நாங்கள் உள்ளே போய் ஏதா வது செய்வம் என்று மோகன் கூற, மூவரும் உள்ளே சென்றபோது

தம்பியவை வாங்கோ எவ்வளவோ வேலை கிடக்கு என்றபடி, கமலின் மாமனாரும் வேறு இருவரும் வந்தார்கள்...

யாராவது வருகினமா என்று கமலின் மாமாவை மனோ கேட்ட போது... ஒருவரும் வரமுடியாதாம். லீவு எடுக்க ஏலாதாம். என்ன செய்வது என்றே தெரிய வில்லை..... என்றபடி பெருமூச்சுவிட்டார்.

சரி அண்ணை நாங்கள் என்ன செய்யிறது.... சொன்னத்தானே செய்யலாம் என்று மோகன் கேட்க.....

நான் காசை தாறன் நீங்கள் தேவையான எல்லா சாமான்களையும் வேண்டுங்கோடாப்பா வாற எல்லாருக்கும் சோடா குடுங்கோ என்றபடி பையிலிருந்து ஒரு கட்டு காசை எடுத்து நீட்டினார்.

கமலின் மாமாவோடு நின்றவர் சொன்னார் பந்தல் வேலை உள்வேலை எல்லாம் நாங்கள் பார்க்கிறம் உந்த சாமான்களையும் வேண்டி வெளி வேலைகளையும் வாறவர்களையும் கவனிச்சா சரி என்றார்.

சரி என்றபடி சாசையும் வேண்டிக் கொண்டு வெளியே வந்தபோது கதிரை வந்து இறக்கப்பட்டுக்கொண்டிருந்தது.....

கணேஸ் உள்ளே போய் ஒருக்கால் பாத்திட்டு வருவமா என்று மோகன் சொல்ல....

ஓமடாப்பா என்றபடி மனோவும் கூற... மூவருமாய் உள்ளே சென்று பார்த்தோம்....

வீட்டு நடுவில் கமலின் தாய் பார்வதியின் உடல் வைக்கப்பட்டிருந்தது. ஆளுயர குத்து விளக்குகள் இரண்டு தலைமாட்டில் பெரிதாக ஒளிவிட்டபடி இருந் தன. அருகே பெறுமதி மிக்க பெட்டி ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அதன் வேலைப்பாடுகளில் இருந்தே அதன் பெறுமதி அதிகம் என்று என் மனம் உணர்த்தியது....

பக்கத்தில் யார் யாரோ வந்தர்கள் அழுதார்கள். ஆனால், கண்ணீர் வரவில்லை உறவுகள் என்று யார் யாரோ வந்தர்கள் போட்டோவுக்கும் வீடியோவுக்கும் முகம் காட்டி விட்டு சென்றார்கள்.....

பண்ட் வாத்திய சத்தமும் இடையிடையே கேட்டுக் கொண்டிருந்தது அச்சத்தத்திற்கிடையிடையே கேட்கும் அழுகுரலும் அவ்விடத்தை சோக மயமாக்கிக் கொண்டிருந்தது.

சரி வா நாங்கள் போய் எல்லாத்தையும் வேண்டிக்கொண்டு வருவம் என்று மோகனும் மனோவும் கேட்க சரி என்றபடி கூட சென்றேன்.

இருவர் தமக்குள்ளே கதைப்பது கேட்டது.

ஆரண்ணே கொள்ளி வைக்கப் போகினம்.....?

அதுதான் தெரியல்ல. சொந்தம் என்டு கொஞ்சச் சனம் நிக்குது. அதில யாராவது வைப்பினம் தானே.... காசிருந்தால் எல்லாம் நடக்கும்....

அதை காதில் விழுத்தாது மோகனும் மனோவும் சென்று கொண்டிருந்தார்கள். நானும் பொருட்படுத்தாது அவர்களோடு சென்றேன்.

கடைக்குசென்று வேண்டிய சாமான்களையும், சோடாவையும் வேண்டிய போது, மனோ வெடியையும் வேண்டுவோமடா என்றேன்...

வெடிபக்கற்றுக்களையும் வேண்டிக் கொண்டு, சமான்களையும் சோடாவையும் வாகனத்தில் ஏற்றிக்கொண்டு வந்த் போது...

ஐயர் வந்திருந்தார்....

குளிப்பாட்டுவதற்கு ஆயத்தங்கள் நடை பெற்றுக்கொண்டிருந்தன. கொள்ளிவைப் பதற்கும் குடம் தூக்குவதற்கும் உறவினர்கள் எனப்பட்டோர் தயார்ப்படுத்தப்பட்டிருந்தார்கள்....

கொண்டுவந்த சாமான்களையும் சோடாவையும் இறக்கி வைத்து விட்டு சோடாவை குடுப்பமாடா என்றேன்....

சரி குடு என்று மோகன் கூற,

மனோ வா குடுப்பம் என்றபடி எல்லோருக்கும் சோடாவை வழங்கி விட்டு....

கிரியை நடக்கும் இடத்துக்கு சென்றபோது அங்கு அவசரமாக வந்த ஒருவர்... மோகனிடம் காதோடு, காதாக...

தம்பி பெரிய கிடாயாய் பார்த்து ரெண்டு பிடி. வெளிநாட்டு காசடாப்பா வடிவா எட்டு செலவுசெய்ய வேண்டும் என்றார் இரகசியமாக.

ஓமண்ணை என்றவாறு மோகன் அவ் விடத்தை விட்டு நழுவினான்.

பாரடா, பொடி இன்னும் எடுக்க வில்லை. அதுக்கிடையில கிடாய் வெட்டுறதுக்கு போய்விட்டாங்கள் என்று மனோ கூறிய போது...

எனக்கு கவலையோடு, சிரிப்பும் வந்தது..... உடையவன் இல்லையென்டால், இறப்பும் கேலிக்குரியதாகிவிடும் என்ற எண்ணம் மனதில் தோன்றியது.

டேய் உங்களோட கமல் கதைக்க வேணுமாம். ரெலிபோன் லைன்ல நிக்கி றான் என்று ஒருவர் வந்து கூற, நாங்கள் மூவருமாய் அவ் விடம் நோக்கி சென்றோம்....

கதைத்துக் கொண்டிருந்த ஒருவர் வந்திட்டாங்கள். நீ அவங்களோட கதை என கூறி போனைத் தந்த போது.....

அதை வேண்டிய மோகன் கமல் நான் மோகன் கதைக்கிறேன் என்னடா சொல்லு...... என்றபோது உள்ளே கமல் அழும் சத்தம் கேட் டது.....

டேய் மோகன் எங்கள் ஒருவராலேயுமே வரேலாமல் கிடக்கு லீவு இல்லை..... போன மாதம் தானே வந்தனாங்கள்..... எல்லாத்தையும் மாமாவோட சேர்ந்து நீங்கள் செய்யுங்கடா..... என்று அழுகையுடன் கமல்விட்டு விட்டு கூறியபோது.... மனம் கனத் தது....

கமல் நீ கவலைப்படாதே நானும் கணேசும் மனோவும் நிக்கின்றோம் எல்லாத்தையும் நாங்கள் பார்த்துக் கொள்கின்றோம். எல்லாம் முடிந்த பிறகு எடு கதைக்கிறம் என்று கூறியவனாய் போனை வைத்தான்.

பாண்ட்சத்தம் உரத்துக் கேட்டது..

சென்று பார்த்தபோது, பொடியை குளிப்பாட்டி, உடுப்பு மாத்திகொண்டு வந்திருந்தார்கள். உள்ள நகைகள் யாவுமே போடப்பட்டிருந்தன விளக்கொளியில் கை கழுத்து எல்லாம் மினுமினுத்தது.... போட்ட நகை கழட்ட அரை மணித்தியாலம் வேணும் போல இருந்தது....

கண்ணீர் அஞ்சலி நோட்டீஸ் பல விதமாக பலவித வர்ணங்களில் எல்லோருக்கும் வழங்கப்பட்டுக்கொண்டிருந்தது...

எல்லாம் நடக்குதடாப்பா. அம்மா என்று சொல்லி அழ, ஒருதரும் இல்லாமல் போச்சே என்று ஒருவர் கூறுவது கேட்டது.

சுடலைக்கு கொண்டுபோற சாமான்களையும் சோடாவையும் எடுத்து வாகனத்தில் ஏத்துவம் வா - என்று மோகன் கூற நானும் மனோவும் அங்கே நின்ற பெடியனிடம் வெளியில் கொண்டு போய் வெடியை கொளுத்தவேண்டும் என்று சொல்ல......

அவர்களிற்கு அது சந்தோஷம்...

எல்லாம் சரி தூக்கி வாகனத்தில் வைக்கவேண்டும் வாடா கணேஸ்.

சரி போ வாறன் என்றபடி வெடியை பகிர்ந்து கொடுத்து விட்டு பொடியை தூக்குவதற் காக அவ் விடம் நோக்கி சென்றபோது தூக்குவதற்கு போட்டி போட்டுக் கொண்டிருந்தார்கள்.....

வீடியோ எடுக்கிற படியால தூக்குவதற்கு போட்டியை பாராடா... என்று மனோ சொல்ல எப்படியோ நடந்தால் சரிதான் என்றான் மோகன்....

மேளச்சத்தம் பாண்ட் வாத்திய குழுவின் சத்தம் வெடிச்சத்தம் என இறுதி ஊர்வலம் சுடலையை நோக்கி நகர ஆரம்பித்தது....

அத்தோடு என் எண்ணங்களும் பின் நோக்கி நகர ஆரம்பித்தது. எப்படியா வது வெளிநாட்டுக்கு போய் உழைத்து வசதியாக வரவேண்டும் என்பதே என் இலட்சியமாக இருந்தது. எப்படியாவது என்னை அனுப்பம்மா என்று அம்மாவை கேட்கும் போதெல்லாம்... வெளிநாட்டு எண்ணத்தை கைவிடு என்றே அம்மாவும் கூறு வார். இதுவரை எனக்கும் வெளிநாடு போகவேண்டும் என்ற எண்ணம் மாறவில்லை. போனால் எப்படி எல்லாம் வாழலாம் என்பதை அம்மா புரியவில்லை என நிகைக்கும்போது மனம் சோர்வடையும்....

டேய் என்னடா கவலையா? என்று மனோவின் குரல் கேட்டு...

ஆமாம் என்றேன்...

சுடலையை நெருங்கியதும் வாகனத்தை நிறுத்திவிட்டு பெட்டியோடு சேர் த்து பிரேதப்பெட்டியை இறக்கி அடுக்கப் பட்டிருந்த விறகின்மேல் வைத்தபோது, சூரிய ஒளிபட்டு பெறுமதிமிக்க அந்த பெட்டி மினுமினுத்தது.....

மோகன் நகையை கழட்டவில்லையடா என்று மனோகூற பொறடாப்பா குடம் சுத்தி வாய்க்கரிசி போடட்டுமன். கழட்டுவம் என்றான் மோகன். எல்லாம் முடிந்ததும் நகையை கழட்டவே கன நேரம் சென்றது....

ஏன் இவ்வளவு நகையளையும் போடு வான் என்று ஒருவர் கேட்க... மற்றவர் இனிப் போடப்போறாவோ... அதுதான் எல்லாம் போட்டிருக்கினம் என்றார்.....

எல்லாம் கழட்டியதும் பெட்டியை உடைக்கும்போது ஐம்பதுனாயிரம் ரூபா பெட்டியை அநியாயமாய் உடைக்கிறாங்கள் என்று கதைப்பது கேட்டது...

எரியப்போற உடம்பைப் பற்றி கவலைப்படவில்லை பெட்டிக்கு இருக்கிற பெறுமதியை நினைத்தபோது, பணத்திற்கு முன்னால் மற்றதெல்லாம் ...... எண்ணவே முடியவில்லை.....

திரும்பி செல்லும்போது மனம் குழம்பியிருந்தது....

மோகன், மனோ நான் பிறகு வாறன் என்றவாறு அம்மாவையும் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு வீடு நோக்கி செல்லும் வரை- ஏதும் கதையாமல் வந்த என்னை என்னடா தம்பி பேசாமல் வாறாய் என்றா அம்மா...

ஒன்றுமில்லை என்று கூறிவிட்டு வீட்டுக்குள் சென்றபோது டேய் கணேஸ் பாத்தியாடா செத்தவீட்டில..... எப்படி ஆடம்பரமாக செய்தாங்கள். எவ்வளவு செலவழிச்சாங்கள் தெரியுமா எல்லா சனமும் இதைத்தான் கதைத்தார்கள் செத்த வீட்டுக்கு எவ்வளவு சனம் தெரியுமா? என்று கூறியபோது....

நான் கதைக்க முன் நீ கதைத்தால் எப்படியடா....?

என்னை நீங்க வெளிநாட்டுக்கு அனுப்பியிருந்தால் நானும் உங்களை எப்படி எல்லாம் வைத்திருப்பேன் தெரியுமா.....

என்னை நீங்கள் வெளிநாட்டுக்கு அனுப்பியிருந்தால் நானும் உங்களை எப்படி எல்லாம் வைத்திருப்பேன் தெரியுமா....

என்னை நீ ஆடம்பரமாக வைத்திருக்க வேண்டாம். நான் சாகும் போது என் பக்கத்திலேயே நீ இருக்க வேணுமடா. அதுதான் என் விருப்பம் என்று சொன்னபோது, கண்களில் கண்ணீர் வழிந்தது.

அம்மா ஏனம்மா அழுகின் றாய் நான் உன்னை நல்லா வைத்திருக்க வேண்டும் என்று தானே ஆசைப்பட்டனான். நீ என்னை கவலைப்படுத்தாதே....

பின்ன என்னடா வெளிநாட்டு எண்ணத்தை கைவிடு என்றால் நீ கேக்கிறாய் இல்லையே..... எனக்கு நீ ஒருதன் தானே இருக்கின்றாய் மூன்று பிள்ளையள் இருந்தும் கூட இன்றைக்கு கமலின் தாய்க்கு உறவினர் யாரோ தானே கொள்ளி வைத்தார்கள்....

உண்மையாக மனமுருகி யாராவது அழுததை நீ பார் த்தியா. அது உனக்கு தெரிய வில்லை அம்மா என்னை விட்டு போய் விட்டியே என்று சொல்லி அழ, ஒரு பிள்ளையுமே இல்லாத நிலை அநாதை போன்ற அநா தரவான நிலையே இது உனக்கு புரியுமா...?

உனக்கு அங்கு இருந்த ஆடம்பரம் மட்டும்தான் தெரிந்தது எனக்கு அவவுக்கு எல்லாம் இருந்தும் அநாதை போல சென்றதை பார்க்க.... நெஞ்சே வெடித்துவிடும் போல இருந்ததடா....

உன்னை பெத்து வளர்த்து ஆளாக்கிய நான் நீ நல்லா இருப்பதை விரும்பமாட்டேனா என்ன.... நீ எனக்கு ஒன்றும் செய்ய வேண்டாம். நான் செத்தால் உன் கையால எனக்கு கொள்ளிவைக்க நீ என் கூடவே இருக்கவேணுமடா அநாதை போல சாக நான் விரும்பவில்லை என்று மூச்சுவிடாது உடம்பு பதறியபடி அழுகை யினூடே அம்மா கூறியபோது

என் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. மனம் பதறியது... அம்மாவை அணைத்தபடி அம்மா வெளிநாடு என்று சொல்லி நான் உன்னை நல்லா வேதனைப்படுத்தி விட்டேன். இனி நான் அதைப் பற்றி கதைக்கமாட்டேன். என்றவாறு... அழாதே அம்மா என்றேன்....

தம்பி அழாதே... நான் உன்னிடம் எனக்காக கேட்பது நான் இறந்த பிறகு உன் கையால் எனக்கு ஒரு கொள்ளி மட்டுமே... அப்பத்தான் என்ரை ஆத்மா சாந்தியடையும் என்றவாறு அம்மா என்னை அணைத்து உச்சிமோர்ந்த போது......

உடம்பு நடுங்கியது... பாசத்தின் பிணைப் புக்கு முன்னால் பணம் ஒரு தூசாகவே பட்டது என் மனதில்........! (முற்றும்)

**கி.யோகேஸ்வரன்**
**புலோலி ப.நோ.கூ.சங்கம்.**


## நீங்களும் ஐக்கியதீபம் சந்தாதாரர் ஆகிவிடுங்கள்

சந்தா விபரம்: 1 - வருடம் :- 120/-
6 - மாதம் :- 60/-
(தபால் செலவு உட்பட)

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

*ஆசிரியர், 'ஐக்கியதீபம்'*

*யாழ். மாவட்டக்கூட்டுறவுச் சபை, கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்*
*2ஆம் மாடி, இல. : 12, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.*



## எழுதுங்கள்......எழுதுங்கள் வரவேற்கிறோம்

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையினால் வெளியிடப்படும் ஐக்கிய தீபம் திங்கள் இதழுக்கு உங்களுடைய ஆக்கங்களை கதைகளாக, கவிதைகளாக, துணுக்குகளாக, பொது அறிவு சம்பந்தமான விடயங்க ளாக பல்சுவை விருந்தளிக்கக்கூடிய வகையில் பொது முகாமையாளரின் சிபாரிசுடன் ஒவ்வொரு மாதமும் 10ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும். தரமானவை பிரசுரிக்கப்படும்.

மற்றும் சங்க நிகழ்வுகள் தொடர்பான செய்திகள், படங்கள் (போட்டோ பிரதியற்ற புகைப்படங்கள்) ஆகியவற்றையும் அனுப்பி வைக்கவும்.

*வந்துசேரவேண்டிய முகவரி:*

*ஆசிரியர், 'ஐக்கியதீபம்'*

*யாழ். மாவட்டக்கூட்டுறவுச் சபை, கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்*
*2ஆம் மாடி, இல. : 12, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.*

# U.N.D.P. கடன் திட்டத்தின் மூலம் வறுமை கோட்டிலுள்ளோர் பயன்பெறுகிறார்கள்

யு.என்.டி.பீ. நிறுவனம் நல்லூர். ப.நோ.கூ. சங்க கிராமிய வங்கியின் மூலம் அமுல் செய்யும் சுழற்சி முறைக் கடன்திட்டத்தில் கடன் பெற்ற பயனாளி ப.உதய குமார் கடன்திட்டம் தொடர்பாகவும் அதன் மூலம் தான் அடைந்த அனுகூலங்களையும் இங்கு விளக்கியுள்ளார். அதன் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகிறது.

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் யு.என்.டி.பி. நிறுவனம் நலிவுற்றோரின் பொருளாதார அபிவிருத்திக்கும் அவர்களின் வாழ்வாதார நடவடிக்கைகளுக்கும் திட்டமிட்ட அடிப்படையில் ப.நோ.கூ. சங்கங்களின் கீழ் இயங்கி வரும் கிராமிய வங்கிகள் மூலமாக சுழற்சி முறையில் கடன் வழங்கி வருவதால், வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்ற என்போன்ற பயனாளிகள் நன்மையடையக் கூடியதாக உள்ளது.

இவ்வாறு யு.என்.டி.பி.யின் கடன் திட்டத்தின் கீழ் நல்லூர் ப.நோ.கூ. சங்க கிராமிய வங்கிமூலம் கடன் பெற்ற பயனாளி ப.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

நல்லூர் ப.நோ.கூ. சங்க கிராமிய வங்கியின் மூலம் கடன் பெற்ற ப.உதயகுமார் தனது அனுபவங்களையும் அதனால், தான்பெற்ற அனுகூலங்களையும் ஐக்கியதீபத்திற்கு தெரிவிக்கையில் கூறியதாவது :-

எனது கடின உழைப்பின் மூலம் சேகரித்த 15 ஆயிரம் ரூபாவை மூலதனமாக வைத்து எனக்கிருந்த ஆர்வத்தினால் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டேன். எனது குடும்பத்தின் உதவியுடன் ஜேர்சியின கறவைப் பசுவொன்றை கொள்வனவு செய்து அதன்மூலம் காலையும் மாலையும் 12 போத்தல் பாலைப்பெற்று விற்பனைச் செய்து வந்தேன்.

4பேர் கொண்ட எனது குடும்பத்தை தொடர்ந்தும் வழிநடத்திச் செல்வதற்கு என்னால் ஆரம்பிக்கப்பட்ட கால்நடை வளர்ப்பை மேலும் விஸ்தரிப்பதற்கு நல்லூர் ப.நோ.கூ. சங்க கிராமிய வங்கியில் சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பித்து 'சிறுகத்தொடங்கி பெருக வாழ்' என்ற முன்னோரின் வாக்கிற்கேற்ப எனது சொற்ப வருமானத்தில் ஒரு சிறு தொகையை வைப்பிலிட்டு சேமித்து வந்தேன்.

இந்நிலையில் நல்லூர் ப.நோ.கூ. சங்கம் தனது கிராமிய வங்கியின் மூலம் யுஎன்டிபி. நிறுவனத்தின் நிதியுதவி மூலம் வறுமைக்கோட்டில் வாழுகின்ற மக்களின் பொருளாதாரத்தை அபிவிருத்திச் செய்யும் நோக்குடன் கடன் வழங்க முற்பட்டபோது, அக்கடன்பெறும் பயனாளிகளில் ஒருவனாக நானும் தெரிவு செய்யப்பட்டு, முதற்தடவையாக 20 ஆயிரம் ரூபாவைக் கடனாகப் பெற்றேன்.

(வளரும்)

## கூட்டுறவு - தகவல் களஞ்சியம்

01. கூட்டுறவு இயக்கத்தின் ஆரம்பகர்த்தாக்கள் என குறிப்பிடத்தக்கவர்கள் - கூட்டுறவுத் தந்தை றொபேட் ஓவன், வில்லியம் தொம்சன், டாக்டர் சிங் ஆகியோராவார்.
02. 1932ஆம் ஆண்டு "தகிறை சிஸ்" (The crisis) என்னும் பத்திரிகையை றொபேட் ஓவன் ஆரம்பித்து சமூக சீர்த்திருத்தக் கருத்துக்களையும் கூட்டுறவு இயக்கக் கருத்துக்களையும் கூட்டுறவு இயக்கக் கருத்துக்களையும் வெளியிட்டார்.
03. 1844ஆம் ஆண்டு றொச்டேல் நகரில் உள்ள 28 நெசவுத் தொழிலாளர்களினால் முதலாவது நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டு நட்புறவு சங்க சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.
04. 1850ஆம் ஆண்டு கூட்டுறவு நூல் ஆலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.
05. 1852ஆம் ஆண்டு கிறிஸ்தவ சமதர்மவாதிகளால் கூட்டுறவுச் சட்டம் உருவானது.

(06ஆம் பக்கம் பார்க்க)

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-று)
கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்
1000 கதிரைகளுடன் வாடகைக்கு விடுதல்

உங்கள் திருமண வைபவங்களையும்,

உங்கள் பிள்ளைகளின் நாட்டிய, இசை அரங்கேற்றங்களையும்,

உங்களால் நடத்தப்படும் கலை, கலாசார வைபவங்கள், மகாநாடுகள், கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள்.

குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவையைப் பெற்றிட

செயலாளர்,
யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை
கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்,
இல. 12, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரியுடன் தொடர்புகொண்டு உங்கள் மண்டபத் தேவைகளைப் பூர்த்தி செய்யுங்கள்.

செயலாளர்,
யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை.

### நிதிப்பற்றாக்குறை இருந்தும்

## சங்கத்திற்கு நிரந்தர கட்டிடம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம்

மானிப்பாய் கோயில் பற்றி ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திரு.மா.செல்வராஜா சங்கத்தின் நிலைமை தொடர்பாக வழங்கிய பேட்டியின் மற்றொரு பகுதி இங்கு பிரசுரமாகிறது

அங்கத்தவர்களுக்கு கடன் வழங்குவதற்கென UNDP. நிறுவனத்தினால், வழங்கப்பட்ட 5 லட்ச ரூபாவுடன் சங்கம் தனது சொந்தப்பணத்தில் 7 லட்ச ரூபா வழங்கி அங்கத்தவர்களுக்கு கடன் வழங்கினோம். இக்கடன் அங்கத்தவர்களின் தேவைகளை இனங்கண்டு அவர்களின் ஆற்றலுக்கேற்ப இதுவரை சுமார் 650 பயனாளர்களுக்கு சுழற்சி முறையில் கடன் வழங்கி வந்துள்ளோம். இவர்கள் தாம் பெற்றகடனை என்ன தேவைகளுக்காக பெற்றார்களோ அத்தேவைகளுக்கு பயன்படுத்தி எமக்கு கடனை மீளளிப்பு செய்து வருகிறார்கள். அவர்களுக்கு வழங்கிய கடன்களை மீளப்பெறுவதில் சங்கம் நூற்றுக்கு நூறு வீதம் வெற்றிகண்டுள்ளது.

வழங்கப்படும் கடன்கள் எவ்வித இடையூறுகளும் இன்றி கிரமமாக அறவீடு செய்யப்படுவதால், மேலும் மேலும் கூடியளவு அங்கத்தவர்களுக்கு கடன் வழங்கக்கூடியதாகவுள்ளது. எமது கிராமிய வங்கி மூலம் இவர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை அதே வங்கி மூலமாக எமக்கு அவர்கள் ஒழுங்காக செலுத்தி வந்தமையால், கடன்களை அறவிடுவதற்கு அவர்களது வீடுகளுக்கு செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படவில்லை.

இக்கடன்களை அவர்களுக்கு நாம் வழங்கும்போது தீர்க்கமான நிர்வாக கட்டுக்கோப்புடனும், சங்கப் பணியாளர்கள், அரச சேவையிலிருந்து இளைப்பாறி ஓய்வூதியம் பெறுபவர்கள், கடன் பெறும் பயனாளிகளுக்கு பிணையாளிகளாக இருப்பதாலும், கடன் அறவீடுகளில் சங்கம் எவ்வித கஷ்டங்களுக்கும் முகங் கொடுக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படவில்லை.

இக்கடன் திட்டத்தில் சரியான அங்கத்துவ பயனாளிகளை நாம் இனங்கண்டு இணைத்து வருவதினால், கிராமிய வங்கிக்கும் அவர்களுக்குமிடையே பரஸ்பர புரிந்துணர்வு ஏற்படக்கூடியதாகவுள்ளது. இதனால், கிராமிய வங்கிகளின் பயன்பாட்டை மேலும், பல பயனாளிகளுக்கு விஸ்தரிக்கும் வகையில் பல திட்டங்களை சங்கம் செயற்படுத்தவுள்ளது.

இத்திட்டத்தின் பிரகாரம் சங்க அங்கத்தவர்களுக்கும், அங்கத்தவர் அல்லாதவர்களுக்கும் கூடியளவு பயன்பாட்டை அளிக்கக்கூடிய வகையில் கிராமிய வங்கியின் கிளையொன்றை பொருத்தமான கேந்திர நிலையத்தில் புதிதாக நிறுவுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

சங்கத்தின் விற்பனை அபிவிருத்தியை பொறுத்தளவில் நாம் தனியார் வர்த்தகர்களுடன் போட்டிபோட்டு வியாபாரத்தை நடத்த வேண்டியுள்ளது. இதற்காக சாத்தியமான பல வழிகளிலும் ஈடுபடுவதற்கு நாம் ஆராய்ந்து வருகிறோம். இதில் முக்கயமாக நாம் விற்பனைப்பொருள் கொள்வனவில் அதிகளவு கவனம் செலுத்தி தரமான பொருட்களை நியாய விலையில் பெற்று மக்களுக்கு விநியோகம் செய்யவேண்டியிருப்பது அவசியமாகும்.

நவீன விற்பனையியல் கோட்பாடுகளைக் கடைப்பிடித்து வாடிக்கையாளர்களை சங்கத்தின் பக்கம் ஈர்க்கும் வகையில் சங்கம் செயற்பட்டு வருகிறது. விற்பனைக்குரிய பொருட்களை சரியான நிறையில், சரியான அளவில், பொதி செய்து அவற்றை விற்பனைச் செய்வதிலும் ஈடுபட்டு வருகிறோம். பாண் உற்பத்தி நிலையம், அரிசி ஆலை ஆகியவற்றை நிறுவி, செயற்படுவதற்கு ஆலோசித்து வருவதுடன் இவற்றை எமது எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களில் முக்கியமானதாக கொண்டுள்ளோம்.

சங்கத்தின் ஆளணியைப் பொறுத்தவரையில் சங்க செயற்பாட்டிற்கென ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் ஆளணித் திரட்டிற்கு அமைவாக கூடாமலும், குறையாமலும் பார்த்து முகாமை செயற்பாட்டு வருகிறது.

தற்போது எமது சங்கம் வாழ்ந்து அனுபவித்த ஒரு கட்டிடத்திலேயே இயங்கி வருகிறது. வட பகுதியின் கூட்டுறவுத் தந்தையென வர்ணிக்கப்படும் அமரர் வீரசிங்கம் அவர்கள் பிறந்த நவாலிக் கிராமத்தை உள்ளடக்கிய மானிப்பாயில் இயங்குவதால், புதிய கட்டிடமொன்றை நிர்மானிப்பதற்கு நாம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். இதற்கு எமக்கு நிதி பற்றாக்குறையாக உள்ளது. யுத்த அனர்த்தங்களினால் இழந்த இழப்பீடுகளை அரசாங்கம் எமக்கு தந்துதவுமானால், நாம் எமக்கென நவீன கட்டிடமொன்றை அமைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். இந்த கட்டிடம் அமைக்கும் பணி நிறைவேறுமானால் இப்பகுதி மக்களும், கூட்டுறவாளர்களும் பெறு மகிழ்ச்சியடைவார்கள் என்பதில் ஐயமில்லை. (முற்றும்)

## 21ஆம் நூற்றாண்டில் .....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

### உயர்ந்த கூட்டுறவு ரீதியிலான நவீன விஞ்ஞான முகாமைத்துவ தந்திரோபாயங்கள்

ஒரு நிறுவனத்தின் பூரண வெற்றி அதன் சொந்தக்காரரினதும், அங்கத்தவர்களினதும் திறமையிலும், அயராத உழைப்பிலுமே பூரணமாக தங்கியுள்ளது. பொதுப் பொருளாதார தேவையும் அவற்றைக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் பூரணமாக நிறைவு செய்யலாமென்ற நம்பிக்கையும், போதிய பொது அறிவும், கூட்டுறவு அறிவும் திறமையும், அயராத உழைப்பும், சங்கத்தில் பூரண விசுவாசமுள்ள அங்கத்தவர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் வெற்றிக்கு மூலக் காரணமாகும். அங்கத்தவரின் ஒத்துழைப்பும் விசுவாசமும் இல்லாமல் ஒரு கூட்டுறவுச் சங்கம் பூரணமான வெற்றியை பெறமுடியாது.

இங்கிலாந்து, ஜேர்மனி, இத்தாலி, டென்மார்க், இஸ்ரேல், சுவீடன், கனடா போன்ற நாடுகளில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களின் சிறப்பு இயல்புகளே அந்நாடுகளின் கூட்டுறவுச் சங்கங்களின் வெற்றிக்குரிய மூலகாரணமாகும். இந்நாடுகளில் அங்கத்தவரின் ஒத்துழைப்பாலும், எல்லைக்கடந்த பொருளாதார பங்களிப்பாலும், கூட்டுறவுச் சங்கங்கள் வெற்றிகரமாக இயங்குகின்றன. பொதுவுடமை நாடுகளிலும் அபிவிருத்தி அடையும் குறைவிருத்தி நாடுகளிலுமுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களிடையே காணப்படுகின்ற குறைபாடுகள் சங்கங்களில் பல பின்னடைவுகள் ஏற்படுவதற்கு மூலக்காரணமாகமான இந்நாடுகளில் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் சங்கத்திலிருந்து தாம் பெறவேண்டிய அத்தியவசியப் பொருட்களை பூர்த்தி செய்வதும் சங்க நிர்வாகத்திலும் செயற்பாட்டிலும் அக்கறை செலுத்தாமல் பொதுக்கூட்டங்களுக்கு சமூகம் கொடுக்காமலும் கிளைக்குழுத் தேர்தல்களுக்கு சமூகம் கொடுக்காமல் இருந்தமையாலும், அங்கத்தவர்கள் தமது கூட்டுறவுத்திறனை அபிவிருத்தி செய்யலாமலும் இருந்தமையால், இலங்கையில் அரசாங்கம் பொதுக்கூட்டங்களைக் கூட்டவும் நெறியாளர் குழுவுக்கும் தலைமைப் பதவிக்கும் திறமைமிக்கவர்களை நியமிக்கவும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு கூட்டுறவுச் சட்டத்தின் பிரகாரம் போதிய அதிகாரங்களை கொடுக்கும் நிலை ஏற்பட்டது. இதனால், கூட்டுறவுச் சங்கங்களின் தன்னாதிக்கமும், சுதந்திரமான இயக்கமும் பாதிக்கப்படவேண்டிய நிலை ஏற்பட்டது.

ஆதலால் அறிவும், ஆற்றலும், விசுவாசமுமுள்ள அங்கத்தவர்களும் சங்கத்தின் வெற்றிக்கு இன்றியமையாதவர்களாக உள்ளனர்.

கூட்டுறவுச் சங்கங்கள் அங்கத்தவர்களை ஊக்குவித்து சங்கத்துடன் இணைப்பதற்கு போதிய கூட்டுறவுக் கல்விப் போதனைகளையும் பயிற்சி வகுப்புக்களையும், நடத்த வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் அங்கத்தவர்களுக்கு பயிற்சி கொடுக்க பயிற்சி நிலையங்களையும் நவீன நூல் நிலையங்களையும் வாசிகசாலைகளையும், நடத்த வேண்டும். கூட்டுறவுத் தொடர்பான சஞ்சிகைகள் பிரசுரங்கள் நூல்கள் ஆகியவற்றை போதியளவு வெளியிட்டு அங்கத்தவர்களின் அறிவையும் திறமைகளையும் அபிவிருத்தி செய்யவேண்டும். இவற்றின் மூலம் அங்கத்தவர்களை சங்கத்தின் விசுவாசமுள்ளவர்களாக ஆக்கி, சங்கத்துடன் இணைத்து அவர்களின் பூரண பங்களிப்புடன் முதலாளித்துவ அச்சுறுத்தல்களை வெற்றிகரமாக எதிர்நோக்கி இலகுவில் வெற்றிபெற்றுக்கொள்ளலாம்.

### அறிவும், ஆற்றலும், ஆளுமையும், நேர்மையும் கடமையுணர்வு உள்ள நிர்வாகிகள்

அறிவும், ஆற்றலும், ஆளுமையும், நேர்மையும், கடமையுணர்வும் மிக்க கிளைக்குழு உறுப்பினர்கள், நெறியாளர் குழு உறுப்பினர்கள், உப சபை உறுப்பினர்கள், தலைவர்கள் போன்றவர்களின் தன்னலமற்ற உயர்ந்த கூட்டுறவு சேவை கூட்டுறவுச் சங்கங்களின் வெற்றிக்கு மிக அவசியமாகும். மேலைத்தேச கூட்டுறவு அமைப்புக்கள் இத்தகைய கூட்டுறவு நிர்வாகிகளை போதிய மட்டில் கொண்டிருப்பதினால்தான் அந்நாடுகளில் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாகவும், உலகிற்கு முன்மாதியாகவும் இயங்குகின்றன.

பொதுவுடமை நாடுகளிலும், குறைவிருத்தி நாடுகளிலுமுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் திறமைமிக்க நிர்வாகிகளை போதியமட்டில் கொண்டிருக்காமையால் இந்நாடுகளில் கூட்டுறவுச் சங்கங்கள் பல பின்னடைவுகளை எதிர்நோக்கியுள்ளன.

பொதுவுடமை நாடுகளிலும் குறைவிருத்தி நாடுகளிலுமுள்ள கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள் தமது கடமைகளை சிறப்பாக புரியாமையால் தான் இந்நாடுகளில் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளை கூட்டுறவுச் சட்டமும் விதிகளும் கட்டுப்படுத்தவேண்டிய பரிதாபகரமான நிலை ஏற்பட்டது.

கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள் கூட்டுறவுச் சங்க கணக்குகளை நாளது தேதியாக ஒழுங்காக எழுதி வைக்காமையால் தான் 1983ஆம் ஆண்டு 32ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க திருத்தச் சட்டத்தின் 43ஆ பிரிவின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் சங்கத்தின் வருமானம், செலவு, சொத்துக்கள், பொறுப்புக்கள், கொடுக்கல் வாங்கல்கள் பற்றி முறையான கணக்குகளை ஒழுங்காக எழுதிவைக்க வேண்டுமென்ற சட்டக்கட்டுப்பாடு புகுத்தப்பட்டது.

(வளரும்)

# மாறிவரும் சிந்தனைக்கு ஏற்ப கூட்டுறவு நவீனமயப்படுத்தப்பட வேண்டும்

## யாழ். ப.நோ.கூ. சங்கத் தலைவர் சிறில்

கூட்டுறவு மரபு முறையிலான வியாபார அணுகுமுறைகளைத் தவிர்த்து மாறிவரும் சிந்தனைகளுக்கு ஏற்ப கூட்டுறவு இயக்கத்தை மறுசீர் அமைத்து நவீனமயப்படுத்தப்படவேண்டிய தேவை இன்று எம்முன்னே உள்ளது. இதனாலேயே எம் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ் நகரின் கேந்திர ஸ்தானத்தில் 'கூட்டுறவு நகர்' என்ற பல்வேறுபட்ட சேவைகள் அடங்கிய நிறுவனத்தை ஆரம்பித்துள்ளோம்.

இவ்வாறு யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கத்தின் கூட்டுறவு நகர் திறப்பு விழாவிற்கு தலைமைத் தாங்கிப் பேசிய சங்கத்தலைவர் சொலமன் சூ.சிறில் தெரிவித்துள்ளார்.

இத்திறப்பு விழாவிற்கு மும்மதத் தலைவர்கள் சமூக, அரசியல், கல்வி, கூட்டுறவாளர்கள், வர்த்தகர்கள் என பல்வேறு சமூகத்தினரும் சமூகமளித்திருந்தார்கள்.

சங்கத்தலைவர் சொலமன் சூ. சிறில் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது :-

கூட்டுறவின் இலச்சியமானது மக்களின் சமூக, பொருளாதார, கல்வி, கலாச்சார மேன்பாட்டிற்காக உழைப்பதேயாகும். இவற்றில் நாம் அன்றும், இன்றும், என்றும் உறுதியாகவே உள்ளோம். இருந்தும் போரினாலும், பொருண்மிய தளபாட அழிவுகளினாலும், அனர்த்தங்களினாலும், இடப்பெயர்வுகளினாலும், பாதிக்கப்பட்ட எம் மக்களுக்கு காலத்தின் தேவையறிந்து செயற்பட்டவர்கள் கூட்டுறவு நிறுவனங்களை சார்ந்தவர்களேயாகும்.

இதனால்தான் மக்கள் மத்தியில் கூட்டுறவு இயக்கம் பேசப்படுகின்ற பொருளாக நிமிர்ந்து நிற்கிறது.

எமது கூட்டுறவு நிறுவனங்கள் மக்கள் சொத்தாக இருப்பதினால், எமது சேவையால் கிடைக்கப்பெறுகின்ற சிறிய இலாபங்கள் முதலாக மக்களிடையே பகிரப்படுகின்றன. மக்களிடையே பகிரப்படுகின்றதென்றால் எம் தேசத்தின் தேசிய தேவைகளுக்கும் சேவைகளுக்கும் மூலதனமாகிறது. இந்நிலையில், நீங்கள் கூட்டுறவினூடாக நாளாந்தம் பெற்றுக்கொள்ளுகின்ற சேவைகளையும், தேவைகளையும் தேச நலனுக்காக பங்களிக்கின்றீர்கள். இந்த வகையிலே நுகர்வோர்கள், அங்கத்தவர்கள், துறைசார்ந்த பெரியோர்களினதும் ஆதரவையும், ஆலோசனைகளையும், நாம் என்றும் வேண்டி நிற்கின்றோம். இதுதான் எங்கள் நிறைவின் வளர்ச்சியாகும் என்றார்.



யாழ். ப.நோ.கூ. சங்க கூட்டுறவு நகர் திறப்பு விழாவில் சங்கத்தலைவர் சூ.சிறில் உரையாற்றுவதையும், மும்மதத் தலைவர்கள் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கத் தலைவர் மற்றும் பெரியோர்களையும் படத்தில் காணலாம்.

### யாழ். மாவட்ட....

(முன்பக்கத் தொடர்ச்சி)

கடற்தொழிலாளர் கூ.சங்கங்களுக்கும் சமாசங்களுக்கும் ஏற்பட்ட இழப்பீடுகளினால், பெருமளவிலான தொழிலாளர்கள் தொழிற்பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

சுனாமி அனர்த்தத்தினால் பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கத்தின் 33 வருடங்களாக சேவையாற்றிய விற்பனையாளர் வே. ஆறுமுகம் மரணமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தெல்லிப்பளை.....

(முன்பக்கத் தொடர்ச்சி)

புனரமைப்பு செய்யப்பட்டு வரும் இக்கட்டிடம் இம்மாத இறுதியில் திறந்து வைக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

### கூட்டுறவுச் சங்க....

(முன்பக்கத் தொடர்ச்சி)

இக்கூட்டத்தில் கூ.அ.உ.ஆணையாளர் செ.கனகசபாபதி திணைக்கள உத்தியோகத்தர்கள் ச.திருச்செல்வம், ந.பாலச்சந்திரன் கூட்டுறவுத்துறை பொறுப்பாளர் பொ.புஷ்பகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### பிரதேச உணர்வு...

(முன்பக்கத் தொடர்ச்சி)

கூட்டுறவு நிறுவனங்களின் அங்கத்தவர்களை பொறுத்தளவில் கூட்டுறவுத் தொடர்பான விழிப்புணர்ச்சி குறைந்தவர்களாகவும், அக்கறையற்றவர்களாகவும் காணப்படுகிறார்கள். இதனால், கூட்டுறவு நிறுவனங்களுக்கு நிர்வாகசபை தெரிவுசெய்யப்படும் போது பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளது.

கூட்டுறவு நிறுவனங்கள் லாபத்தை மையமாகக்கொண்டு செயற்பட முனையாமல் கூட்டுறவுக் கொள்கைகளை பின்பற்றி சேவை நோக்கத்துடன் செயற்படவேண்டும். கூட்டுறவுத்துறை பணியாளர்கள் ஏனைய துறை பணியாளர்களைப் போல அதிகம் ஊக்குவிக்கப்படுவதில்லை. இதனால், அவர்கள் கூட்டுறவு நிறுவனங்களில் தொழிலுக்கு மட்டும் தங்கியிருக்கின்ற சூழ்நிலையே காணப்படுகிறது.

இதனால், நிறுவன வளர்ச்சியில்தான் தங்களது வளர்ச்சியும் தங்கியுள்ளதென்பதை பணியாளர்கள் உணராத நிலையில் காணப்படுகிறார்கள் என்று கூறினார்.


## யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபை அச்சகம் (வ-து)

⌘ ஓவ்செற் முறையிலான அச்சடித்தல (*Offset Print*)
⌘ ஸ்கிறீன் பிறின்டிங் (*Screen Printing*)
⌘ அச்சுக்கோர்ப்பு முறையிலான அச்சடித்தல் (*Letter Print*)
⌘ 2005ஆம் ஆண்டுக் கலண்டர்கள் (இரகுநாதையர் கணிப்பீடு)

போன்ற வேலைகளைத் தரமாகவும், அழகாகவும், கண்கவர் வடிவங்களில் உங்கள் எண்ணம்போல் அச்சிட நாடுங்கள்.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை அச்சகம்
JAFFNA DISTRICT CO-OPRATIVE CONCIL PRESS

40/1 Navalar Road, Jaffna.
40/1 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.




மானிப்பாய் ப.தெ.வ.அ. கூ. சங்கத்தின் பாரதி முன்பள்ளி சிறார் ஒருவருக்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். ஐயாத்துரை பரிசுபொருள் வழங்குவதை படத்தில் காணலாம்.

### நூல்கள் அன்பளிப்பு

சுன்னாகம் ப.நோ.கூ. சங்க பணியாளர் ஐநா.சங்கம் தனது அங்கத்தவர்களின் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளைகளுக்கு கணனி கற்கைநெறி தொடர்பான பெறுமதிவாய்ந்த நூல்களை சங்கத்தலைவர் செ.லோகேஸ்வரன் தலைமையில் வழங்கி கௌரவித்தது.

செல்வன் செ.ரம்பேகன், செல்வி ந. இலக்ஷாயினி, செல்வி சி.சங்கீதா, செல்வன் கு. கிருபிகன் ஆகியோருக்கே இப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

### பணிப்பாளர் சபை

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது, பணிப்பாளர் சபை உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக ப.இராமச்சந்திரனும், உபதலைவராக மா.குணசேகரமும், செயலாளராக ஐ.சுந்தரம் பிள்ளையும், பணிப்பாளர்ராக சு. சேவ கப் பெருமான், சி.புஸ்பராசா, மா.யோகேஸ்வரராசா, இ.மகேந்திரராசா, சி.முத்துக்குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### கூட்டுறவு - தகவல் களஞ்சியம்

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

06. 1865ஆம் ஆண்டு அமெரிக்காவின் கூட்டுறவுக் ஆதரவான சட்டம் உருவானது.
07. இதே ஆண்டில், அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த பெஞ்சமின் பிராங்கிளினால் முன்வைக்கப்பட்ட கூட்டுறவுக் காப்புறுதித் திட்டத்தின் அடிப்படையில் கூட்டுறவுக் காப்புறுதிச் சங்கங்கள் சட்ட அங்கீகாரத்துடன் ஆரம்பிக்கப்பட்டன.
08. 1867ஆம் ஆண்டு ஜேர்மனியில் கூட்டுறவுச் சட்டம் உருவாக்கப்பட்டது.
09. 1850ஆம் ஆண்டு சூல்ஸ் என் பவரும், ரபெஸ்சன் என்பவரும் இணைந்து முதன் முதல் கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பித்தனர்.
10. 1904ஆம் ஆண்டு இந்தியாவில் கூட்டுறவுச் சட்டம் உருவாக்கப் பட்டது.
11. 1911ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையில் கூட்டுறவுச் சட்டம் சட்டசபையால் நிறைவேற்றப்பட்டது.

### ஏ... இந்துக் கடல் அன்னையே!

ஏ......
இந்துமா கடல் அன்னையே
ஏனம்மா இந்த சீற்றம்
எதற்கம்மா இந்த நாற்றம்
கலக்குதம்மா உந்தன் செயல்
கலங்குதம்மா
இந்த உலகு ஏழை எழியவர்
என்ன செய்தார் ஏது மறியாத
அப்பாவிச் சிறுவர்களை
இழுத்துச் சென்று
கோரக் கொலைகளை
ஏன் செய்தாய்
இளைஞர்கள் எத்தனை பேர்
முதியவர்கள் எத்தனை பேர்
இளங் காதல் சோடிகள்
எத்தனை எத்தனையோ
அத்தனையும் பார்க்கையிலே
ஆயிரம் ஆயிரமாய்
ஆருயிர் விட்டவர்கள்
அனாதை ஆக்கப்பட்டவர்கள்
அனைத்தையும்
சொல்லில் அடக்கிட முடிந்திடுமா
பேரலையாய் எழுந்து பெரும் புயலாய் வந்து
பேரழிவைத் தந்து சென்ற
உன் செயல் பேசி முடியாது
ஆழித் தாயே என் சுனாமி
அனர்த்தம் ஆறாத வடுவம்மா
மாறாத துயரம்மா

கே.எம். தியாகராசா
இலிகிதர்.
பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்


## மாறிவரும் சிந்தனைக்கு ஏற்ப கூட்டுறவின் நவீன சேவைகள்

யாழ். குடாநாட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணியில்.....

சுத்தமாக பொதி செய்யப்பட்ட மளிகைப் பொருட்கள், இறைச்சி வகைகள், புதுவகையான ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பான வகைகள், உள்ளூர்ப் பழவகைகள், பழரசங்கள், ஆங்கில மருந்து வகைகள், அன்பளிப்பு, அழகுசாதன வாசனைப் பொருட்கள், பாடசாலைப் பொருட்கள், எழுதுகருவிகள், சிறுவர் சிறுமியர்களுக்கான அன்பளிப்புப் பொருட்கள்.

இவை மட்டுமன்றி

ஊரக வைப்பகம், மருந்தகம், முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட பதிப்பகம் (ஒப்செற்), தொலைத் தொடர்பகம் (பக்ஸ், போட்டோப் பிரதி, றோணியோ அட்டையிடுதல்), சுத்தம் சுகாதாரம் நிறைந்த உணவகம், கூட்டுறவின் உள்ளூர் உற்பத்திகளின் காட்சியறையும், விற்பனையும்.

இவை அனைத்தையும் யாழ். ப.நோ. கூ. சங்க கூட்டுறவு நகரில் கணனிமயசேவையினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

127, காங்கேசன் சாலை வீதி, யாழ்ப்பாணம்.


யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை அச்சகத்தில் அச்சிட்டு இல. 12 காங்கேசன் துறை வீதியில் அமைந்துள்ள கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தின் 2ஆம் மாடியில் இயங்கும் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையினால் 2005 தைமாதம் வெளியிடப்பட்டது.